செ.வெ.எண்: 123/2017 நாள்: 16.02.2017

# செய்தி குறிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த முன்னாள் படை வீரர்களுக்கான சுய தொழில் முனைவோர் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 21.02.2017 அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள நாஞ்சில் அரங்கத்தில் வைத்து நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கத்தில் பல்வேறு அலுவலர்கள் சுய தொழில் துவங்குதல் அதற்கான ஆயத்தப் பணிகள் மூலதனம் மற்றும் வங்கி கடன் பெறுதல் தொடர்பாக விளக்கவுரை வழங்கிட உள்ளனர். மேலும் சுயதொழில் துவங்கிட வங்கி கடனுக்கு பரிந்துரை செய்யப்படும். எனவே இம்மாவட்டத்தைச் சார்ந்த சுயதொழில் துவங்க ஆர்வமுள்ள முன்னாள் படை வீரர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் படை வீரர் நல துணை இயக்குநர் (பொ) மா.சீனிவாசன் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

துணை இயக்குநர்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.